# நீதி மற்றும் தேசிய நல்லிணக்க அமைச்சு

## குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை

# பதவி வெற்றிடங்கள்

2023ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க குற்றத்தால் பலியானவர்களுக்கும் மற்றும் சாட்சியாளர்களுக்கும் உதவுவதற்கும் மற்றும் பாதுகாப்பதற்குமான சட்டத்தை செயற்படுத்து பொருட்டு தாபிக்கப்பட்டுள்ள குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான இந்த தேசிய அதிகார சபையில் நிலவுகின்ற கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவியணி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க, தகுதிவாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. பணிப்பாளர் நாயகம் (ஒப்பந்த அடிப்படையில்) HM 2-3 (பதவி 01)

**சம்பள அளவுத்திட்டம் :**

HM 2-3,ரூ. 173,000-12x4,850 - 231,200

**ஆரம்ப சம்பளப் படிநிலை**

2025.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்பட்டுள்ள தொகை ரூ. 127,651.00,
2026.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்படவுள்ள தொகை ரூ. 150,325.00
2027.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்படவுள்ள தொகை ரூ. 173,000.00

(2025/01ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் உரிய அட்டவணைக்கு இணங்க - 2025/01/01-2025/12/31)

**தகைமைகளும் அனுபவமும் :**

சட்டம், நிர்வாகம் அல்லது குற்றவியல் ஆகிய விடயப் பிரிவுகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள ஒரு ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.

அத்துடன்

உரிய விடயப் பிரிவில் ஒரு பட்டப்பின்படிப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தலும் வேண்டும்.

அத்துடன்

பட்டப்படிப்புத் தகைமைகளைப் பெற்றதன் பின்னர் அரசாங்கத் திணைக்களத்தில், அரசாங்கக் கூட்டுத் தாபனத்தில், நியதிச்சட்ட சபையில் அல்லது உரிய அரச சாராத அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் நிறுவனத்தில் "முகாமைத்துவ மட்டப் பதவிகளில் ஆகக்குறைந்தது 15வருட கால சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் (இதில் ஆகக்குறைந்தது 05 வருடம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் (HM) இருத்தல்)" வேண்டும்.

**வயதெல்லை :**

35 வயதுக்குக் குறையாமலும் மற்றும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

## 2. பணிப்பாளர் (அரவணைப்பு) HM 1-3 பதவி 01

**சம்பள அளவுத்திட்டம் :**

HM 1-3 ரூ. 152,500.00-15X4,100-214,000.00

**ஆரம்ப சம்பளப் படிநிலை**

2025.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்பட்டுள்ள தொகை ரூ. 113,556.00,
2026.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்படவுள்ள தொகை ரூ. 133,028.00
2027.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்படவுள்ள தொகை ரூ. 152,500.00

(2025/01ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் உரிய அட்டவணைக்கு இணங்க - 2025/01/01-2025/12/31)

**தகைமைகளும் அனுபவமும் :**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள சட்டம், குற்றவியல் அல்லது சமூக விஞ்ஞானம் ஆகிய விடயப் பிரிவுகளில் ஒரு விஷேட பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள பதவிக்குரிய விடயப் பிரிவில் ஒரு பட்டப்பின்படிப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

ஆரம்பப் பட்டப்படிப்புத் தகைமைகளைப் பெற்றதன் பின்னர் அரசாங்கத் திணைக்களத்தில், அரசாங்கக் கூட்டுத் தாபனத்தில், நியதிச்சட்ட சபையில் அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் நிறுவனத்தில் "நிறைவேற்று / நடுத்தர முகாமைத்துவ மட்டத்தில்" விடயப் பிரிவுக்கு உரிய பதவிகளில் ஆகக்குறைந்தது 15வருட சேவை காலத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள ஒரு பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

இலங்கைப் பொலிஸ் சேவையில் பரிசோதகர் பதவிக்குக் குறையாத ஒரு பதவியை வகித்த பொலிஸ் அதிகாரியாக இருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

இந்தப் பதவிக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

முகாமைத்துவ சேவைகள் (MM) வகுதியில் தரம் 1 பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது உரிய விடயப் பிரிவில் 5வருடம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

35 வயதுக்குக் குறையாமலும் மற்றும் 55வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

## 3. முகாமைத்துவ சபையின் செயலாளர் MM 1-3 பதவி 01

**சம்பள அளவுத்திட்டம்:**

MM 1-3 ரூ. 96,650-10x2,480-15x3,450-173,200

**ஆரம்ப சம்பளப் படிநிலை:**

2025.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்பட்டுள்ள தொகை ரூ. 75,143.00, 2026.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்படவுள்ள தொகை ரூ. 85,896.00
2027.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்படவுள்ள தொகை ரூ. 96,650.00

(2025/01 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் உரிய அட்டவணைக்கு இணங்க - 2025/01/01-2025/12/31)

**தகைமைகளும் அனுபவமும்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள சட்டம் பற்றிய ஒரு ஆரம்பப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

உயர் நீதிமன்றத்தில் சட்டத் தொழிலில் ஆகக்குறைந்தது 03வருட கால சேவை அனுபவத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

"கனிஷ்ட முகாமைத்துவ உதவியாளர்" JM சேவை வகுதியில் உரிய விடயப் பிரிவில் ஒரு பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05)வருட திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

22 வயதுக்குக் குறையாமலும் மற்றும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

## 4. உதவிப் பணிப்பாளர் - அரவணைப்பு MM 1-3 பதவி 01

**சம்பள அளவுத்திட்டம்:**

MM 1-3 ரூ. 96,650-10x2,480-15x3,450-173,200

**ஆரம்ப சம்பளப் படிநிலை:**

2025.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்பட்டுள்ள தொகை ரூ. 75,143.00, 2026.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்படவுள்ள தொகை ரூ. 85,896.00
2027.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்படவுள்ள தொகை ரூ. 96,650.00

(2025/01 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் உரிய அட்டவணைக்கு இணங்க - 2025/01/01-2025/12/31)

**தகைமைகளும் அனுபவமும்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள சட்டம்/ குற்றவியல்/ உளவியல்/ சமூக விஞ்ஞானம் ஆகிய பாடப் பிரிவுகளில் அல்லது பதவிக்குரிய பாடப் பிரிவுகளில் ஒரு ஏனைய பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

பட்டத்தைப் பெற்றதன் பின்னர் உரிய பாடப் பிரிவில் ஆகக்குறைந்தது ஒரு வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

22 வயதுக்குக் குறையாமலும் மற்றும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

## 5. அரவணைப்பு உத்தியோகத்தர் MA 4 - பதவிகள் 03

**சம்பள அளவுத்திட்டம்:**

MA 4: ரூ.64,320-10x1,360-15x1,670-5x2,040-113,170

**ஆரம்ப சம்பளப் படிநிலை:**

2025.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்பட்டுள்ள தொகை ரூ. 52,875.00,2026.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்படவுள்ள தொகை ரூ. 58,598.00
2027.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்படவுள்ள தொகை ரூ. 64,320.00

(2025/01 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் உரிய அட்டவணைக்கு இணங்க - 2025/01/01-2025/12/31)

**தகைமைகளும் அனுபவமும்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள சட்டத்தை/ குற்றவியலை/ உளவியலை ஒரு பாடமாக உள்ளடக்கிய ஒரு பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கைப் பொலிஸ் சேவையில் பரிசோதகர் பதவிக்குக் குறையாத ஒரு பதவியை வகித்த பொலிஸ் அதிகாரியாக இருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

இந்தப் பதவி தொடர்பாக மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத (MA1) சேவை வகுதியின் கீழ் வரும் ஒரு பதவியில் ஆகக்குறைந்தது எட்டு (08) வருட சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

22 வயதுக்குக் குறையாமலும் மற்றும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

## 6. விசாரணை உத்தியோகத்தர் MA 4 - பதவி 01

**சம்பள அளவுத்திட்டம்:**

MA 4: ரூ.64,320-10x1,360-15x1,670-5x2,040-113,170

**ஆரம்ப சம்பளப் படிநிலை:**

2025.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்பட்டுள்ள தொகை ரூ. 52,875.00, 2026.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்படவுள்ள தொகை ரூ. 58,598.00
2027.01.01ஆம் திகதிக்கு செலுத்தப்படவுள்ள தொகை ரூ. 64,320.00

(2025/01 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் உரிய அட்டவணைக்கு இணங்க - 2025/01/01-2025/12/31)

**தகைமைகளும் அனுபவமும்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ள சட்டம் பற்றிய ஆரம்பப் பட்டத்தை அல்லது சட்டத்தை அல்லது குற்றவியலை ஒரு பாடமாக உள்ளடக்கிய ஒரு பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கைப் பொலிஸ் சேவையில் பரிசோதகர் பதவிக்குக் குறையாத ஒரு பதவியை வகித்த பொலிஸ் அதிகாரியாக இருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

இந்தப் பதவி தொடர்பாக மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

முகாமைத்துவ உதவியாளர் -தொழில்நுட்பம் சாராத (MA1) சேவை வகுதியின் கீழ்வரும் ஒரு பதவியில் ஆகக்குறைந்தது எட்டு (08)வருட சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

22வயதுக்குக் குறையாமலும் மற்றும் 45வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

## 7. முகாமைத்துவ உதவியாளர் MA1-1- பதவி 01

**சம்பள அளவுத்திட்டம்:**

MA 1-1: ரூ.46,220-10X540-7X630-4X890-20X1,190-83,390

**ஆரம்ப சம்பளப் படிநிலை:**

2025.01.01ஆம் திகதிற்கு செலுத்தப்பட்டுள்ள தொகை ரூ. 40,403.00, 2026.01.01ஆம் திகதிற்கு செலுத்தப்படவுள்ள தொகை ரூ. 43,312.00
2027.01.01ஆம் திகதிற்கு செலுத்தப்படவுள்ள தொகை ரூ. 46,220.00

(2025/01ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் உரிய அட்டவணைக்கு இணங்க - 2025/01/01-2025/12/31)

**தகைமைகளும் அனுபவமும்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில்
1. சிங்களம்/தமிழ்
2. கணிதம்
3. ஆங்கிலம்

ஆகிய பாடங்கள் அடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச்சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று பாடங்களில் (பொது அறிவுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

(அ) ஆரம்ப தரம்-பயிற்சித்திறன் பெறாத, அரைத்தேர்ச்சி மற்றும் தேர்ச்சி சேவை வகுதிகளில் கீழ்க்காணும் "அ,இ மற்றும் ஈ" ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில்
1. சிங்களம்/தமிழ்
2. கணிதம்
3. ஆங்கிலம்

ஆகிய பாடங்கள் அடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச்சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

கணனியில்/தட்டெழுத்திட்டு கடிதங்களை தயாரித்தல் பற்றி மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழு அங்கீகரித்துள்ள ஒரு பாடநெறியைப் பின்பற்றியிருத்தல் வேண்டும்.

(இ) சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தலும் மற்றும் அந்தப் பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

(ஈ) உரிய திகதிக்கு முன்னர் ஒரு நிரந்தர பதவியில் 05வருட தொடர்ச்சியான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

18வயதுக்குக் குறையாமலும் மற்றும் 45இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**நன்மைகள்**

1. வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவு
2. அதிகார சபையால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தப்படும் 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்தப்படும் 3% பங்களிப்பு
3. மேற்குறித்த 1,2,3மற்றும் 4ஆம் பதவிகளுக்கு ரூ.25,000 மாதாந்தக் கொடுப்பனவு
4. மேற்குறித்த 1,2,3 மற்றும் 4 ஆம் பதவிகளுக்கு மாதாந்த தொலைபேசிக் கொடுப்பனவு
5. மேற்குறித்த 1மற்றும் 2ஆம் பதவிகளுக்கு எரிபொருள் கொடுப்பனவு மற்றும் உத்தியோகபூர்வ வாகனம் அல்லது மாதாந்தம் ரூ.5,000.00 போக்குவரத்துக் கொடுப்பனவு

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு (2025.08.18)இந்தத் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொதுவான நியதிகள்**

01. ஒவ்வொரு விண்ணப்பதாரரும்
    - I. இலங்கைப் பிரஜை ஒருவராக இருத்தல் வேண்டும்.
    - II. பதவிக்கென பணிக்கப்படும் கடமைகளை சரியான முறையில் நிறைவேற்றவும் அதே போல் தீவில் எந்த ஒரு பிரதேசத்திலும் பணியாற்றவும் தேவையான உடலியல் மற்றும் உளவியல் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - III. நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.
02. மேற்குறித்த தகைமைகளையும் பதவிக்குரிய அனுபவத்தையும் உறுதிப் படுத்தும் சான்றிதழ்களின் இணைப் பிரதிகளை விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
03. நீங்கள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 8% பங்களிக்க வேண்டும்.
04. விண்ணப்பதாரர்கள் தகாத முறையில் செல்வாக்கைப் பிரயோகித்தல் அல்லது தகாத முறையில் விசாரணை செய்தல் ஆகியன விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு வழிவகுக்கும்.
05. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு கிடைக்காத சகல விண்ணப்பங்களும் சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் சகல விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

கல்வித் தகைமைகளையும், தொழில் தகைமைகளையும், அனுபவத்தையும் மற்றும் சகல தகவல்களையும் உள்ளடக்கி நீங்கள் தயாரித்த சுயவிபர அறிக்கையை சகல சான்றிதழ்களினதும் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் தவிசாளர், குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை, இல. 428/11ஏ, முதலாவது மாடி, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2025.08.18 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தவிசாளர்**
**குற்றத்தால் பலியானவர்களையும் மற்றும் சாட்சியாளர்களையும்**
**பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபை**
**இலக்கம் 428/11ஏ, முதலாவது மாடி,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,பத்தரமுல்ல.**
**தொ.பே.இல. 0112879539**
**திகதி: 2025.07.27**